## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 15 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாரதிராஜா | தொழில் | : 9 ம் வகுப்பு படித்து கொண்டிருக்கிறார். |
| தந்தை பெயர் | : பிரபு | | |
| கிராமம் | : கல்லாங்குப்பம் | சமயம் | : |
| வட்டம் | : செஞ்சி | சாதி | : |
| | | வயது | : 15 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் இல்லோடில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 ம் வகுப்பு படித்து கொண்டு வருகிறேன். சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பாக எனது தாத்தா, பாட்டி ஆதிலட்சுமி, ராமகிருஷ்ணன் ஆகியோர்களுடன் கண்டாச்சிபுரத்திற்கு அரசு பேருந்தில் செஞ்சியில் இருந்து சென்றோம். அனந்தபுரம் காட்டுக்குள் விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் எனக்கு வயது மிகவும் குறைவு. எனக்கு நெற்றியிலும் கை, கால்களிலும் விபத்தில் அடிபட்டது. என்னுடன் வந்த தாத்தா பாட்டிக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. காயம்பட்ட என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். விபத்து எப்படி ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. விபத்து நடந்த சமயத்தில் எனக்கு சின்ன வயது என்பதால் வேறு எதுவும் ஞாபகம் இல்லை.

**குறுக்குவிசாரணை:**

பேருந்தில் எந்த பகுதியில் எனது தாத்தா பாட்டியுடன் அமர்ந்து பயணித்தேன் என்றால் பேருந்து ஓட்டுனரின் பின் சீட்டில் அமர்ந்து இருந்தேன். டம் என்று சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து நடந்தது தெரியவந்தது என்றால் ஆமாம். விபத்து யாருடைய கவனக்குறைவால் எந்த பஸ் மீது மோதியது தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் தெரியவில்லை. விபத்து

நடந்த ரோடு குறுகலான பகுதி என்றால் சரிதான். இருபுறத்திலும் செடி, கொடி இருப்பதனால் பேருந்து வேகமாக அங்கு செல்லாது என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வண்டி எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் யார் கொடுத்தது என்றால் தெரியவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்தில் காயம்பட்டது சம்மந்தமாக நஷ்ட ஈடு பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 15 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரண்யா | தொழில் | : கூலிவேலை |
| கணவர் பெயர் | : ஸ்டீபன் ராஜ் | சமயம் | : |
| கிராமம் | : கொழப்பலூர் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 29 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் சென்னையில் கொளத்து வேலைக்கு செல்கிறேன். 2017 ம் ஆண்டு கொழப்பலூரில் அரசு பேருந்தில் ஏறி செஞ்சிக்கு வந்தேன். செஞ்சி காட்டு அருகே வந்தபோது எதிரே வந்த அரசு பேருந்தும் நான் பயணித்த பேருந்தும் மோதியதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. என்னுடன் பயணித்த 10 பேருக்கும் மேல் அடிபட்டது. நான் அரசு பேருந்தை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான். காயம்பட்ட நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

பேருந்தில் நான் எந்த இடத்தில் பயணித்தேன் என்றால் பேருந்தின் நடுவில் அமர்ந்து வந்தேன். டம் என்று சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து நடந்தது தெரியவந்தது என்றால் ஆமாம். விபத்து யாருடைய கவனக்குறைவால் எந்த பஸ் மீது மோதியது தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் 2017. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. விபத்து நடந்த ரோடு குறுகலான பகுதி என்றால் சரிதான். ரோட்டில் இருபுறத்திலும் செடி, கொடி இருப்பதனால் பேருந்து வேகமாக அங்கு செல்லாது என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட பேருந்து வண்டி எண் தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் சொன்ன பிறகு தான் ஆஜர் எதிரி தான் வாகனம் ஓட்டியவர் என்று தெரியவந்தது என்றால்

ஆமாம். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் யார் கொடுத்தது என்றால் தெரியவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்தில் காயம்பட்டது சம்மந்தமாக நஷ்ட ஈடு பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈடு பெற்றேன் என்றால் ரூ.10,000/- கொடுத்தார்கள். இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 15 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரளா | தொழில் | : இல்லத்தரசி |
| கணவர் பெயர் | : அசோக்குமார் | சமயம் | : |
| கிராமம் | : கொழப்பலூர் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 31 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கொழப்பலூரி வசித்து வருகிறேன். 2017 ம் ஆண்டு செஞ்சிக்கு செல்ல கொழப்பலூரில் அரசு பேருந்தில் ஏறி பயணித்தேன். செஞ்சி காட்டு பகுதி அருகே வந்தபோது 2 அரசு பேருந்தும் மோதிக்கொண்டன. அந்த விபத்தில் தலையில் காயம் பட்டது. பஸ்ஸில் இருந்த நிறைய பேருக்கு அடிபட்டது. நான் பயணித்த பேருந்தை ஆஜர் எதிரி ஓட்டினாரா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. காயம்பட்ட நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன்.

**குறுக்குவிசாரணை**:

விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**